மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய பெரு மக்களே, இன்றைய அலுவல்களை முறைப்படி நடத்த மிகச் சிறந்த முறையில் நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இப்போது வினாநேரம்

3. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

அரசு அலுவலர்களின் ஒய்வு பெறும் வயது

1—*வினா எண். 371) திரு. நா இராமகிருஷ்ணன்: மற்றும் திரு. ல.முல்லைவேந்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதை மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அத்தகைய செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையிலில்லை.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்கள் ஓய்வுபெறும் வயதைப்பற்றிய வினாவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விடை அளித்திருக் கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் ஓய்வு பெறும் வயது என்ன ? மற்ற மாநிலங்களிலே ஓய்வு பெறும் வயது என்ன, என்ன இருக் கின்றன என்பதை அருள்கூர்ந்து அவைக்குத் தெரிவிப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர் களே, நம்முடைய மாநிலத்தில் ஓய்வுபெறும் வயது முதலில் 55 ஆக இருந்து, பிறகு ஓய்வு பெறும் வயது 58-ஆக அரசு ஆணை எண் 532-இன்படி உயர்த்தப்பட்டது. மற்ற மாநிலங்களில் மாநில அரசுப் பணியாளர்களுடைய ஓய்வு பெறுகின்ற வயது :

அரியானாவில் 58 ; ஜம்மு-காஷ்மீரில் 55 ; கர்நாடகாவில் முதலில் 58ஆக இருந்து 1981-இல் 55 ; கேரளாவில் முடிவில் 55 ஆக இருந்து 1984-இல் 58; மத்தியப் பிரதேசத்தில் 58 ; மராட்டி யத்தில் 58 ; ஒரிஸ்ஸாவில் 58 ; ராஜஸ்தானில் 55 ; உத்திரப் பிரதேசத்தில் 58 ; மேற்கு வங்காளத்தில் 58 .

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக, அரசு ஊழியர் பணி ஓய்வுபெறும் வயது குறைக்கப்படும் என்று அந்த அரசு ஊழியர்கள் அச்சப் படுகிற செய்திகள் வந்திருக்கிற காரணத்தால் குறைக்கும் எண் ணம் எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவுபடுத்தினால் உதவிகரமாக இருக்கும்.

1989 மார்ச் '27]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 'அச்சம் தவிர் என்ற பாரதியாரின் வாக்கை ஞாபகப்படுத்துகிறேன். (சிரிப்பு

[முற்பகல் 9-20.]

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாநில அரசு தொடர்புடைய கேள்வி.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழக அரசு 55 வயதைத்தான் ஓய்வு பெறும் வயதாக வைத்து இருந்தது என்று மாண்புமிகுமுதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதையே இப்போதும் இந்த 58 வயது என்பதை மாற்றி 55 வயது என்று ஆக்கி 58 வயதில் பெறக் கூடிய எல்லா வாய்ப்புகளையும் 55-வது வயதிலேயே ஓய்வு பெறும்போது அரசு ஊழியர்கள் பெறத்தக்க வகையில் ஏதேனும் மாற்றம் செய்ய அரசு உத்தேசித்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களிடமிருந்தோ அல்லது அவர்களுடைய அமைப்புகளிடமிருந்தே அதுபோன்ற முறையீடு ஏதும் அரசுக்கு வரவில்லை.

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்த விருப்பத்தில் ஓய்வு பெற விரும்புகிறவர்களுக்கு அவர்களுடைய வாரிசுகளில் ஒருவருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரிசுகள் இருந்தால், அதற்குரிய தகுதி இருந்தால், அதுபோன்ற சட்டம் இருந்தால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் இல்லை என்றால், அதைத் திருத்துவதற்கு ஏதாவது வகை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயதைக் குறைப்பதைப் பற்றி திரு. தீட்சிதர் அவர்கள் கவலைப்பட மாட்டார்கள் என்று கருது கிறேன். (சிரிப்பு).

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வுபெற்றபின் சிறந்த அதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையில் அரசில் நியமிப்பதைப்பற்றி செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்டால் அது குறித்து விளக்கம் அளிக்கப்படும்.

திரு. பே. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வேலை வாய்ப்பைப் பெற வேண்டிய இளைஞர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அரசு ஓய்வுபெறும் வயதை 55 ஆகக் குறைத்து வேண்டுமானால் அந்த 3 ஆண்டுக்கான தொகையை அளித்து இவர்களை அனுப்பி விட்டு வருகின்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த தமிழக அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த அரசுப் பணியாளர்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது 55 அல்லது 56 வயதைக் கடந்தவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் இல்லாததால் இதனால் வேலைவாய்ப்புப் பெருகும் என்ற நிலை எழாது. 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்று 55, 56, 57 என்று வயது பூர்த்தி அடையும் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் ஊழியர்களின் எண்ணிக்கை முறையே 11,446 ; 10,626 ; 8,928 என்ற அளவில் இருக்கிறது. அதனால் வேலைவாய்ப்பு அதிகமாக பெருகும் என்று எண்ணுவது சரியல்ல.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28 வயதுவரை அரசுப் பணியில் சேரலாம் என்பதை 30 வயது வரை என்று இப்போது உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே வேலையில் சேருகின்ற 2 ஆண்டு இப்போது கழிந்துவிடுகிறது. அதை சரிக்கட்டுவதற்கு வயது வரம்பை உயர்த்துவதோ அல்லது நஷ்டஈடு கொடுப்பதோ அரசின் நோக்கமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தான் அரசுப் பணிகளில் அமர்த்துகின்ற உச்சவரம்பு வயது 28-லிருந்து 30 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனுடைய விளைவுகள் பற்றி பிறகு ஆராய்ந்து உறுப்பினர் கேட்ட கேள்வி குறித்துப் பரிசீலிக்கப்படும்.

1989 மார்ச் 27]

திரு. எம். முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது ஒரே நேரத்தில் படித்தவர்களில் வசதி உடையவர்கள் பணத்தைக்கட்டி வேலையில் சேர்ந்துவிடுகிறார்கள். ஏழைகள் வேலையில் சேர முடியவில்லை. ஆகவே, அவர்கள் பதவியில் அமர்கின்ற நிலையில் இத்தனை வருடம்தான் வேலை பார்க்கலாம் என்று ஒரு நிர்ணயம் செய்ய அரசு உத்தேசித்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 58 வயது வரையில்தான் வேலை பார்க்கலாம் என்று ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பெற்றிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்களைக் குறித்து பல்கலைக்கழக மானியக் குழு சம்பள விகிதங்களை மாற்றி அமைத்ததோடு கல்லூரி ஆசிரியர்களுடைய பணிக் காலத்தை 58-லேயிருந்து 60 வரையிலே உயர்த்த வேண்டுமென்று பரிந்துரைத்து இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி அரசு ஏதாவது , அந்த வயதை உயர்த்துவதற்கு, 60-ஆக நிர்ணயிப்பதற்கு, அரசு செயற் குறிப்பு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 58 வயது என்ற அளவிலேதான் இருக்கிறது. அது குறித்து விளக்கம் அறிய விரும்பினால் உறுப்பினர் அவர்கள் தனி வினா எழுப்பலாம்.

கோவை அரிசி வியாபாரிகளிடமிருந்து லெவி கொள்முதல

—(-*வினா எண். 328)—திரு மு. இராமநாதன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு, மாவட்ட உணவு வழங்கு துறை அதிகாரிகள் மூலம் கோவை மாநகர அரிசி வியாபாரிகளிடமிருந்து லெவி கொள்முதல் செய்வது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகின்றது ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே,—

(அ) ஆம்.

(ஆ) 50 சதவீத வர்த்தக லெவி முறையின்கீழ் கொள்முதல் செய்யப்படுகிறது.